## தொகுத்தறி மதிப்பீடு : மாதிரி வினாத்தாள்

9ஆம் வகுப்பு 2ஆம் பருவம் – தமிழ் 2ஆம் தாள்

காலம் : 2.00 மணி மதிப்பெண்: 60

அ.உரிய விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. (10)

1.பூவாது காய்க்கும் , மலர்க்கை – அடிக்கோடிட்ட சொற்களுக்குரிய இலக்கணம் யாது?

அ.பெயரெச்சம்,உவமைத்தொகை
ஆ.எதிர்மறைப்பெயரெச்சம்,உருவகம் இ.வினையெச்சம் ,உவமை
ஈ.எதிர்மறை வினையெச்சம்,உவமைத்தொகை

2.சரியான கூற்றினைத் தெரிவு செய்க.

அ.’ஆ’என்பது எதிர்மறை இடைநிலை
ஆ.வீட்டிற்கோர் புத்தகசாலை என்பது அண்ணாவின் மேடைப்பேச்சு
இ.வில்லுப்பாட்டு ஓர்இலக்கிய வடிவம்

1.ஆ,இ சரி ,அ தவறு 2. ஆ,இ சரி ,ஆ தவறு

3.மூன்றும் சரி 4.மூன்றும் தவறு

3.மரவேர் என்பது ------- புணர்ச்சி

அ.இயல்பு ஆ.திரிதல் இ.தோன்றல் ஈ.கெடுதல்

4.பொருத்தமான உரிச்சொல் தேர்ந்தெடுத்து எழுதுக.
----- பெரும் பொதுக்கூட்டம்
அ.மா ஆ.கடி இ.உறு ஈ.தவ

5.ஊரன் என்பதன் பகுதி அ.ஊர் ஆ.ஊர இ.ஊரன் ஈ.ஊ

6.கீழ்க்காண்பவற்றுள் உணர்ச்சித் தொடர் எது?
அ.சிறுபஞ்சமூலத்தில் உள்ள பாடல்கள் பெரும்பாலும் மகடூஉ முன்னிலையில் அமைந்துள்ளன.
ஆ.இந்திய நூலகவியலின் தந்தையென அறியப்படுபவர் யார்?
இ.என்னண்ணே ! நீங்கள் சொல்வதை நம்பவே முடியவில்லை
ஈ.வாழ்க்கையில் அடிப்படைத் தேவைக்கு அடுத்த இடத்தைப் புத்தகசாலைக்குத் தருக.

7.இடவாகு பெயர் சான்றினைத் தேர்ந்தெடுக்க.
அ.முல்லையைத் தொடுத்தாள் ஆ.வகுப்பறை சிரித்தது
இ.மஞ்சள் பூசினான் ஈ.வற்றல் தின்றான்

8.பொன்வளை என்பது ----புணர்ச்சி.
அ.இயல்பு ஆ.விகாரம் இ.உடம்படுமெய் ஈ.குற்றியலுகரம்

9.பூக்கூடை என்பது ---- விகாரப்புணர்ச்சி.
அ.தோன்றல் ஆ.திரிதல் இ.கெடுதல் ஈ.குற்றியலுகரம்

10.பேரழகு என்பதன் இலக்கணக்குறிப்பு
அ.பண்புத்தொகை ஆ.பெயரெச்சம்
இ.இலக்கணப்போலி ஈ.உரிச்சொல் தொடர்

ஆ.சுருக்கமான விடையளிக்க. (10)

11.பிழை நீக்கி எழுதுக: நல்ல தமிழுக்கு எழுதுவோம்.
12.இடைச்சொற்கள்கொண்டு தொடர் அமைக்க:
பழனிமலை பெரியது , இமயமலை மிகப்பெரியது
13.ஆகுபெர் அமையுமாறு தொடர் அமைக்க:
இந்திய வீரர் எளிதில் வென்றனர்.
14.ஆகுபெயர்களைச் சொற்றொடரில் அமைக்க : விளைச்சல்
15.சொற்றொடரில் ஒளிந்து உள்ள தமிழ்நாட்டின் துறைமுகங்களை கண்டறிக.
பூம்பொழில் புகும் காலம் கார்கால மேகம்.
16.வினைமுற்றை வினையாலணையும் பெயராக்கித் தொடர்களை இணைக்க.
“நேற்று ஒருவன் வந்தான் , இவன் என் தம்பி “
17.சேர்த்தெழுதுக: 1.தமிழ் + பேசு 2.கை + கள்
18.பொருத்தமான உடம்படுமெய்யுடன் எழுதுக:
1.பூ + இனம் 2.சே + அடி
19.மரபுத்தொடர் கொண்டு தொடர் அமைக்க. எட்டாக்கனி

20.மரபுப் பிழைகளை நீக்கி எழுதுக:
நேற்று தென்றல் காற்று அடித்தது.

இ.எவையேனும் மூன்றனுக்கு விடையளிக்க.(6)
21.தான் என்னும் இடைச்சொலை எப்படியெல்லாம் பயன்படுத்தலாம்?
22.பகுபத உறுப்பிலக்கணம் தருக:சமைக்கின்றார்.
23. பட்டப் பெயர்கள் ஆகுபெயராகுமா? எடுத்துக்காட்டுகளுடன் விளக்குக.
24.குற்றியலுகரம் , முற்றியலுகரம் இவற்றின் வேறுபாட்டை எழுது.
25.உவமைத்தொடர்களை உருவகத் தொடர்களாக்குக:
முத்து நகை தன் வில் போன்ற புருவத்தில் மை தீட்டினாள்.
26.உரிய தமிழ் எண்கள் எழுதுக.
அ.பதினெண்கீழ்கணக்கு நூல்கள் –
ஆ.திருக்குறளின் அதிகாரங்கள் –
இ.சிற்றிலக்கியங்கள் –
ஈ.சைவத்திருமுறைகள் –
27.இணையானத் தமிழ்ப்பழமொழிகளை எழுதுக.
1. Love your food. 2.Thinking is great.
28.படத்துக்கேற்ற குறளினை எழுதுக



29.காட்சியைக் கண்டு அரைப்பக்க அளவில் எழுதுக.



PADASALAI.NET

30.பாடலுக்குத் திரண்ட கருத்தை எழுதி நயம் பாராட்டுக.(4)

பனிமலர் ஏறிய தேனும் –காய்ச்சுப்

பாகிடை ஏறிய சுவையும்,

நனிபசு பொழியும் பாலும் – தென்னை

நல்கிய குளிரிள நீரும்,

இனியன என்பேன் எனினும் – தமிழை

என்னுயிர் என்பேன் கண்டீர்! – பாரதிதாசன்

ஒன்றனுக்கு விடையளிக்க (6)

**31. இசைக்கு நாடு , மொழி , இனம் தேவையில்லை என்பதைச் 'செய்தி'க் கதையின் மூலம் விளக்குக.**
**32. நுலகம் , நுல்கள் குறித்து அண்ணாவின் வானொலி உரையில் வெளிப்படுகின்ற கருத்துகள் யாவை?**

ஒன்றனுக்கு விடையளிக்க (6)

**33.உங்கள் பள்ளி நுலகத்திற்குத் தமிழ் – தமிழ் – ஆங்கிலம் என்னும் கையடக்க அகராதிகள் பத்தினைப் பதிவஞ்சலில் அனுப்புமாறு நெய்தல் பதிப்பகத்திற்கு ஒரு கடிதம் எழுதுக.**

**34. விளம்பரத்தைச் செய்தித்தாள் செய்தியாக மாற்றி அமைக்க.**

**புத்தகம் படிப்போம்! புதியன அறிவோம்!**

**புத்தகத் திருவிழா**

**நாள்: செப்டம்பர் 19 – 28வரை**

**இடம்: சரசுவதி மகால் நுலகம், தஞ்சாவூர்**

**நேரம் : காலை 8 முதல் மாலை 6 வரை**

**(முதல் நாள் காலை 9 மணிக்குத் தமிழகக் கல்வி அமைச்சர் தொடங்கிவைக்கிறார்)**

**(நாள்தோறும் மாலை 6 மணிக்குப் புதிய புத்தகங்கள் வெளியீடும் சிறப்புப் பேச்சாளர்களின் உரையும் இடம்பெறும்)**

**அனைவரும் வாரீர்! அறிவுத்திறம் பெறுவீர்**

குறிப்புகளைக் கொண்டு , தலைப்பிட்டு ஒன்றனுக்கு விடையளிக்க (6)

**35.நுாலகம் – தோற்றம் – பயன்படுத்தும் முறை – பயன்கள்.**

**36.பெண் கல்வி – பெண்ணடிமை – பெண்கள் முன்னேற்றம் – சாதனைப்பெண்கள்**

**ஆக்கம்:** ச. சேட்டு மதார்சா, பட்டதாரி ஆசிரியர்– தமிழ்.
ஈ.கே.எம்.அ.க. மதரஸா இஸ்லாமியா உயர்நிலைப் பள்ளி,
ஈரோடு – 638001. அலைபேசி – 8883681115